**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண். 6/2022**

**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காத்தாயி | தொழில் | |
| க/பெ. | முருகன் | வயது | 47 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 09.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**6ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1.நான் பாகப்பிரிவினை பாரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன். வழக்கு சொத்து எனது தாயார் காமாட்சிக்கு சொந்தமான சொத்து என்று கட்சி செய்கிறேன். தாவா புலஎண் 140/1 எனது தாயார் காமாட்சி பெயரில் 21.04.1982ஆம் தேதியில் அறந்தாங்கி சார்பதிவகத்தில் ஆவண எண். 1220/1982 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்தான புலஎண்.132/3 என்னுடைய தகப்பனார் மகாலிங்கம் பெயரில் 08.07.1983ல் அறந்தாங்கி சார்பதிவகத்தில் ஆவண எண். 1428/1983 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது அயிட்ட சொத்து என் தகப்பனாரால் கிரைய வாங்கப்பட்டதா என்றால் எனது தாயார் என் தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கினார்

2. வழக்கு 1,2 அயிட்ட சொத்துக்கள் என்னுடைய பூர்வீக சொத்துக்கள் என்பதை நிரூபிக்க நான் தான் கடமை பட்டவர் என்றால் சரிதான். 2வது அயிட்ட சொத்தை பொறுத்து என் தகப்பனார் பெயரில் பதிவு ஏற்பட்டு உள்ள காரணத்தினால் எனது தாயார் என் தகப்பனார்பெயரில் கிரையம் வாங்கினார் என்பதை நிரூபிக்க நான் தான் கடமைப்பட்டவர் என்றால் சரிதான்.

**மறுவிசாரணையில்லை.**